1987 ஏப்ரல் 28]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மதுக்கரை அசோசியேட் கம்பெனி, சுண்ணாம்புக் கல்லை வெட்டியெடுக்கிற உரிமையைப் பெற்று அந்தப் பகுதியில் இருக்கிற மலை முழுவதையும் நீண்டகாலமாக தங்கள் கையில் வைத்திருக்கிறார்கள். அதனைப் புதுப்பித்தும் வருகிறார்கள். குறைந்த மூலதனத்தைக் கொண்டு மினி சிமென்ட் ஆலைத் தொழிலை செய்ய வரக் கூடியவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில், குறைந்த விலையில் அவர்களுக்கு மூலப்பொருளாக இருக்கிற சுண்ணாம்புக் கல் கிடைப்பதற்கு அவர்களுக்கு உரிமம் வழங்குவதில் அதற்குரிய கட்டணங்களைக் குறைத்து சலுகை காட்டப் படுமா? அதிகமாக கற்கள் டெபாசிட் இருக்கிற இடத்திலிருந்து அவர்கள் அதனைக் கொண்டு வருவதற்கு அனுமதி கொடுத்து அந்தச் சிறு தொழிலை வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே. மதுக்கரை சிமென்ட் ஆலையைப் பொறுத்தவரையில் இது ஒரு தனியார் நிறுவனமாகும். ஆகவே உரிமம் கிடைப்பதில் எந்த சங்கடமும் இருக்காது. எங்கே சுண்ணாம்புக் கல், சிமென்ட் கிரேடு கிடைக்கிறதோ அவைகளையெல்லாம் சிமென்ட் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

கோவை மாவட்டத்தில் உலக வங்கி குடிநீர்த் திட்டம்.

520—(*வினா எண். 11556) திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள உலக வங்கி குடிநீர்த் திட்டத்தில் (பவானி ஆற்றுத் திட்டம்) காரமடை ஒன்றியத்தில் பயன்பெறும் கிராமங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியோடு செயல்படுத்த இருக்கும் அத்திக்கடவு திட்டத்தில், காரமடை ஊராட்சி

ஒன்றியத்தைச் சேர்ந்த பெள்ளாதி ஊராட்சியில் 9 குக்கிராமங் களும் சிக்காரம்பாளையப் ஊராட்சியில் 12 குக்கிராமங்களும் பயன்பெறும்.

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, உலக வங்கித் திட்டமான அத்திக்கடவு குடிதண்ணீர் திட்டத்தில் முகப்பு வாயிலே காரமடை ஒன்றியத்தில்தான் துவங்குகிறது. நானூ றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இதில் பயன்படுவதாக திட்ட மிட்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது. காரமடை ஒன்றியத்தில் இருக்கிற மற்ற பகுதிகள் இன்னும் ஏழு கிராமங்கள் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்தத் திட்டம் துவங்கிய காலத்திலிருந்தே வற்புறுத்தி வருகிறேன். அதிகாரிகள் நான்கு கி.மீ. வரையில் உள்ள கிராமங்கள் மெயின் குழாயிலிருந்து குடி தண்ணீர் சப்ளைக்காக எடுத்துக் கொள்ளப்படுமென்று தெரிவித் திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைக் கருத்தில் கொண்டு, காரமடை ஒன்றியத்தில் இருக்கிற ஏற்கனவே கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிற அந்த ஏழு கிராமங்களை எடுத்துக்கொள்வதற்கான உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட பொறியாளர்களைக் கலந்து, மாண்புமிகு உறுப் பினர்களுடைய ஆலோசனையை ஏற்று நடவடிக்கை மேற் கொள்ளலாமென்று கருதுகிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் எப்போது முடிவுறும் என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் மொத்தம் 12 குக்கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. மொத்தம் 16 ஆயிரம் பேர்களுக்கு தண்ணீர் வழங்க இருக்கிறது. இந்தத் திட்டம் முடிவடையும் நாள் குறிப்பிடப்படவில்லை என் றாலும், இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக முடிவு அடையும்.